<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>

<u>அசல் வழக்கு எண்.27/2021</u>

**<u>DW1</u>**

| | | |
|---|---|---|
| பெயர்.திரு.சகாதேவன் | த/பெ.திரு. | நாள்.03.09.2025 |

<u>பி.வா.சா.1 அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் இடம் தொடர்பாக தாக்கல் செய்துள்ளார். என்னுடைய எதிர்வழக்குரையில் 2 வது பிரதிவாதி தேவேந்திரன் இறந்துவிட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் அவ்வாறு குறிப்பிட்டுளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு என்னுடைய முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்யும் வரை 2 வது பிரதிவரிதி இறந்துவிட்டார் என்று நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த 2 வது பிரதிவாதிக்கு சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்துளோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல

2. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.2 தாவா சொத்தின் சர்வே எண்.755/5 வாதி, வாதியின் மனைவி மற்றும் மற்ற வாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சொத்து எங்களுடையது என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்து ஆனந்தாயி அம்மாள் பெயரில் உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். சொத்தை என்னுடைய தந்தையிடம் கொடுத்தார்கள் என்றாலும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொத்து நான் குடியிருக்கும் இடத்திற்கு ஒட்டியவாறு தெற்கில் உள்ளது.

3. நான் குடியிருக்கும் இடத்தின் சர்வே எண் என்றால் எனக்கு நினைவில்லை. நான் குடியிருக்கும் இடம் ரெங்கநாத செட்டியார் இடம் என்றால் சரியல்ல. அந்த இடம் எனக்கு உரிமையானது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவித்து இல்லை என்றால் சரியல்ல. சொத்து வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் அத்துமீறி அடிக்கடி வாதிகளுக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றாலும் அதனால் தான் வாதிகள் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. சொத்து தொடர்பாக கூவத்தூர் காவல் நிலையத்தில் அடிக்கடி புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காஞ்சிபுரம் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தான் புகார் கொடுக்கப்பட்டது. வாதி தான் புகார் கொடுத்தார். வாதி கூவத்தூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் நடவடிக்கை எடுக்காததால் அதனால் தான் காஞ்சிபுரம் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)